[9th August 1965

Defence Fund.

* 84 *Q.*—Sri N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the names of Cinema artistes who have promised to donate a part of their income towards the Defence Fuud;

(*b*) the names of persons who donate accordingly so far; and

(*c*) the amount donated so far?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No cinema artiste has promised to donate a part of his income towards the National Defence Fund.

(*b*) & (*c*) : Do not arise.

Tractors

* 85 *Q.*—Sri S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Home be pleased to state :—

(*a*) whether it is a fact that some tractors used exclusively for agricultural purposes in South Arcot district have been seized; and

(b) if so, the details thereof and the reasons therefor?

கனம் திரு. பி. கக்கன் : *(அ) இல்லை.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கே. சம்பந்தன் : *சில டிராக்டர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தின் அதிகாரிகளால் பிடிக்கப்படுகிறது என்பது தெரியுமா ? அவைகள் விவசாயத்திற்கு மாத்திரம் தான் உபயோகப் படுகின்றன, என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வந்திருக்கிறதா ?*

கனம் திரு. பி. கக்கன் : *விவசாயத்திற்கு என்று டிராக்டர்கள் உபயோகப்படுமானால் அந்த டிராக்டர்களைப் பிடிக்கமாட்டார்கள். அதை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டால் அப்பேர்ப்பட்ட டிராக்டர்களை பிடிப்பார்கள்.*

திரு. எஸ். கே. சம்பந்தன் : *அவர்களுடைய சொந்த தானியத்தை நிலத்திலிருந்து வீட்டுக்குக் கொண்டுவருதலும், களத்திற்குக் கொண்டு போதலும், விற்பனைக்குக் கொண்டு செல்வதும், விவசாய ஆப்பரேஷனில் சேர்ந்ததா அல்லது வேறு இனத்தைச் சேர்ந்ததா ?*

கனம் திரு. பி. கக்கன் : *சொந்தத்திற்கு நிலத்திலிருந்து நெல்லைக் கொண்டுபோனால் அது விவசாயத்தைச் சார்ந்ததுதான். டிராக்டர்களில் விற்பனைக்குக் கொண்டுபோனால் அது விவசாயத்திற்கு என்று சொல்லமுடியாது.*

Dr. H. V. HANDE : Is it a fact, Sir, that tractors are lying idle for want of spare parts and, if so, how many of them are lying idle?

The Hon. Sri P. KAKKAN : A separate question may be put.